**தலைப்பு 250 - அரச கணக்குகள் திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தலைப்பு 250 - அரச கணக்குகள் திணைக்களத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கான தகவல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் உள்ளடங்கிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் அரச கணக்குகள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 29 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 ஜூலை 19 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அரச கணக்குகள் திணைக்களத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்த அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற்கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கைகள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றது என்பது,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டுக்கான ஆரம்ப செலவுகளின் மதிப்பீடு மற்றும் திருத்தப்பட்ட செலவுகளின் மதிப்பீடுகளுக்கு இடையிலான வேறுபாடு ஆரம்ப செலவுகள் மதிப்பீட்டுக்கு இணையாக நூற்றுக்கு 37 இல் இருந்து நூற்றுக்கு 151 வகையான வேறுபாடு காணப்பட்டது. | எதிர்பார்க்கப்பட்ட அளவைவிட வெளிநாட்டு பயிற்சிகள் மற்றும் கருத்தரங்குகள் அதிகரித்தல், போட்டோ பிரதி இயந்திர திருத்த வேலைக்கான செலவுகள் அதிகரித்தல் மற்றும் New Cigas Server கான அவசர சேவை ஒப்பந்தத்துக்கு உள்ளடங்குவதற்கு நேர்ந்திருத்தல், செயற்பாட்டு குத்தகை தவணைகள் அதிகரித்திருத்தல் மற்றும் சந்தையின் வாகனங்களின் உதிரிப் பாகங்களின் விலைகள் வேகமாக அதிகரித்தல் ஆகியவை இந்த வேறுபாட்டுக்கு காரணமாக இருந்தது. | நி.பி. 50 இன் பிரகாரம் வருடாந்த செலவின மதிப்பீடுகள் முடிந்தளவு சரியாகத் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) 5 மீண்டெழும் செலவின விடயங்கள் மற்றும் 4 மூலதன செலவின விடயங்களுக்காக மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த காரணத்தினால் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியான ரூபா 40,032,321 ஆன நிதியேற்பாடு எஞ்சியிருந்ததுடன் அது ஒவ்வொரு செலவின விடயங்களினதும் தேறிய நிதியேற்பாட்டில் 20 சதவீதம் மற்றும் 100 சதவீதமான வீச்சில் காணப்பட்டது. | 2023.01.27 ஆம் திகதிய 01/2023 பாதிட்டு சுற்று நிருபத்தின் பிரகாரம், மீண்டெழும் ஏற்பாடுகள் நூற்றுக்கு 6 ஆல் நீக்கப்படுதலின் கீழ் ஏற்பாடுகள் தடுத்து வைத்தல், மேலதிக நேர மற்றும் விடுமுறை தின சம்பளங்களுக்காக உத்தியோகத்தர்களை சேவையில் ஈடுபடுத்துவதை வரையறுத்தல், அரச நிறுவனங்களுக்கிடையில் கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்களை நிகழ் நிலை முறையின் கீழ் நடத்துவதனால் போக்குவரத்து செலவுகளை வரையறுத்தல், அத்தியாவசியமான திருத்த வேலைகளை மாத்திரம் மேற்கொள்ளுதல், கொள்வனவுகளை வரையறுத்தல், பெரும்பாலான பயிற்சி வேலை திட்டங்களை நிகழ் நிலை முறையின் கீழ் மேற்கொள்ளுதல், இடைக்கால வரையறையினுள் அரச நிறுவனங்களுக்கு பொருந்தும் வகையில் தயாரிக்கப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்கான (Customized Accounting Standards)உரிய அங்கீகாரம் கிடைக்காததால், திட்டமிட்டபடி பணிகளை முடிப்பதற்கு முடியவில்லை ஆகியன இந்த ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டு இருப்பதற்கான காரணமாக இருந்தது. | -மேற்படி- |

## 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டுக்கான 2024 ஆம் வருடத்தின் ஜனவரி, பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் செலுத்தப்பட்டிருந்த கூட்டு மொத்தம் ரூபா 65,266 ஆன பொறுப்புக்கள் மற்றும் | பொறுப்புகளின் பட்டியலைத் தயாரிப்பதில் ஏற்பட்ட பிழையொன்றாகும். | நிதிக்கூற்றுக்கள் தொடர்பான அனைத்து கடமைகள் மற்றும் பொறுப்புகள் அடையாளம் |

| | | |
|---|---|---|
| கடப்பாடுகள், நிதிக் கூற்றுக்களில் பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் கூற்றில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | | காணக்கூடிய வகையில் முறையான விதிமுறையொன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டும். |

## 2.3 முற்பணம் வழங்கல் மற்றும் தீர்ப்பனவுகள்

### 2.3.1 நானாவித முற்பணக் கணக்கு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நானாவித முற்பணக் கணக்கின் நிலுவையில் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக காட்டப்பட்டுள்ள ரூபா 124,317,823 ஆன மீதியொன்று காணப்பட்டதுடன் அம் மீதியின் 88 சதவீதம் பொலனறுவை, அநுராதபுரம் மற்றும் அம்பாறை மாவட்டச் செயலகங்களிலிருந்து அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்டது. அந்த நிலுவை முற்பணத்தை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்ப்பதற்கு திணைக்களம் தவறியிருந்தது. | நிலுவையில் மீதித் தொகையை தீர்ப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பின்வருமாறு.<br>• பொலன்னறுவை மாவட்ட செயலகம்<br>- தேசிய கொள்கை மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சிடமிருந்து வரவேண்டிய ரூபா 19 மில்லியன் தொகையை அறவிட முடியாததனால், உணவு ஆணையர் திணைக்களத்திடமிந்து அந்தத் தொகையை நீக்குவதற்கும்,<br>- கிரயத்தை விட குறைந்த விலைக்கு அரிசி விற்பனை செய்ததால் ஏற்பட்டதாக அடையாளம் காணப்பட்ட ரூபா 2.9 மில்லியன் இழப்பை நீக்குவதற்கும் அரச நிதித் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.<br>• அனுராதபுரம் மாவட்ட செயலகம்<br>- குற்றம் சாட்டப்பட்டவர் நிலுவைத் தொகைக்காக தண்டிக்கப்பட்டுள்ளதால், அநுராதபுரம் விவசாய அபிவிருத்தி மாவட்ட அலுவலகம் ரூபா 2 மில்லியனை நீக்குமாறு நி.பி. 109 பிரகாரம் அங்கீகாரத்திற்கு அனுப்பப் பட்டுள்ளது. | பின் தொடர் நடவடிக்கைகள் முறைமைப்படுத்தப்பட்டு நிலுவைக் கடன் மீதியை அறவிடுவதற்கு போதிய மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | - நொச்சியாகம பல் நோக்கு சேவைகள் கூட்டுறவுச் சங்கம் கலைக்கப்படுகிறது மற்றும் கலைப்பு நடவடிக்கைகளை உடனடியாக முடித்து, தொடர்புடைய தொகைகளை செலுத்துமாறு கலைப்பாளருக்கு எழுத்து மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.<br><br>- எப்பாவல பல் நோக்கு சேவைகள் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான முதலீட்டுத் தொகையின் வட்டியிலிருந்து மாதாந்தம் ரூபா 30,000 மற்றும் விதைத் திட்டத்தின் இலாபத்திலிருந்து ரூபா 500,000 செலுத்த சங்கம் ஒப்புக்கொண்டுள்ளது.<br><br>- விவசாய சேவை நிலையங்கள் மற்றும் பல் நோக்கு சேவைகள் கூட்டுறவு சங்கங்களின் ரூபா 18 மில்லியன் தொகை தொடர்பான சட்ட நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னர் மேலும் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.<br><br>• அம்பாறை மாவட்ட செயலகம்<br>- ரூபா 16.7 மில்லியன் பெறுமதி தொடர்பான ஒழுக்காற்று விசாரணையை துரிதப்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.<br><br>- ரூபா 21.4 மில்லியன் தொடர்பான சட்ட நடவடிக்கைகள் நிறைவடைந்த பின்னர் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் 2019 மார்ச் 02 ஆந் திகதி இடம்பெற்ற பணத் திருட்டு ஒன்று காரணமாக ஏற்பட்ட நட்டத்தை ஈடு செய்வதற்காக நி.பி. 106 இன் பிரகாரம் விடுவிக்கப்பட்டிருந்த ரூபா | அநுராதபுரம் பொலிஸ் நிலையத்தினால் மேற்கொள்ளப்படும் விசாறனைகள் முடிவடைந்த பின்னர் தீர்வு செய்யப்பட வேண்டிய ரூபா 6,321,785 தொடர்பில் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | 6,321,785 ஆன முற்பணத்தொகை 03 வருடங்களுக்கு மேலாகியும், கணக்காய்வு திகதி வரை தீர்வு செய்யப்படவில்லை. | | |
| (இ) | கொழும்பு பல் மருத்துவ நிறுவனத்தில் 2002 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 02 ஆம் திகதி இடம்பெற்ற சம்பள கொள்ளை தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு 2022 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 26 ஆம் திகதி C 3 ஆக குறிப்பிடப்பட்டுள்ளதாக மாளிகாகந்த நீதவான் நீதிமன்றம் சுகாதார அமைச்சுக்கு அறிவித்துள்ளதுடன், சுகாதார அமைச்சினால் இந்தத் தொகையைக் கழிப்பதற்காக 2022 செப்டம்பர் 23 அன்று, பொது 285 விண்ணப்பத்தை சமர்ப்பித்த போதிலும், இந்தத் தொகையைக் கழிப்பதற்கு அல்லது வேறு எந்த நடவடிக்கையும் எடுப்பதற்கு முனைவதற்கு கணக்காய்வு திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | அந்த நட்டத்தை நீக்குவதற்கு சுகாதார அமைச்சினால் அரச நிதித் திணைக்களத்திற்கு விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படுள்ளதோடு உரிய நீக்குதல் தொடற்பில் பரிசீலனைக்கு அரச நிதித் திணைக்களத்தினால் விரிவான தகவல் அறிக்கையொன்று சுகாதார அமைச்சின் செயலாளரிடம் கோரப்பட்டுள்ளது. | -மேற்படி- |

## 2.4 நிதியல்லா சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 டிசம்பர் 31 ஆம் தேதியில் நிறைவடைந்த வருடத்திற்கான காசு பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளினால் உருவான காசு பாய்ச்சலின் கீழ் மூலதன செலவாக ரூபா 1,718,656 ஆன பெறுமதியொன்று காட்டப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டுக்காக அந்த பெறுமதி ரூபா 88,125 ஆக இருந்ததன் காரணமாக முதலீட்டு செயற்பாடுகளினால் உருவாகிய தேறிய காசு பாய்ச்சல் ரூபா 1,630,531 ஆள் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. இந்த கூடுதலாக காட்டப்பட்டதனுள் மூலதன | நிதிக் கூற்றுகளில் ஏசிஏ - சி மாதிரி படிவத்தில் (காசு பாய்ச்சல் கூற்று) வருடாந்த பாதிட்டு மதிப்பீட்டினுள் உள்ளடக்கப்பட்டுள்ள செலவுகளை வகைப்படுத்தலுக்கு ஏற்ப மூலதன செலவுகள் வகைப்படுத்தல்கள் காணப்படுவதுடன், அரச கணக்குகள் திணைக்களத்தின் காசுப் பாய்ச்சல் கூற்றும் அதன் பிரகாரம் தயாரிக்கப்பட்டுள்ளது. | காசு பாய்ச்சல் கூற்றை தயாரிக்கும் போது கணக்கிட்டு தத்துவங்களுக்கு இணங்க காசு பாய்ச்சல்கள் வகைப்படுத்தப்பட வேண்டும். |

சொத்துக்கள் புனர்நிர்மானம் மற்றும் மேம்படுத்தல் செலவினங்கள் மற்றும் திறன் மேம்பாட்டிற்கான செலவினங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளதை மேலும் அவதானிக்க முடிந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு அளவைப் பெற்றுக் கொள்ள முடியாமை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திறைசேரி செயற்பாட்டு நடவடிக்கைகள் தானியங்குவதற்காக ஒன்றிணைந்த திறைசேரி முகாமைத்துவ தகவல் கட்டமைப்பு ஒன்று (ITMIS) அறிமுகப்படுத்தல் 2010 ஆம் வருடத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்காக ஒட்டுமொத்த முதலீட்டு மதிப்பீட்டு கிரயம் ரூபா 7,920 மில்லியன் க்கு சமமான அமெரிக்கா டொலர் 60 மில்லியனாக காணப்பட்டது. 2023 டிசம்பர் 31 ஆம் திரதியாகும் போது அண்ணளவாக 13 வருட காலம் கடந்திருந்த போதிலும், கணக்காய்வுக்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையில் ரூபா 5,647 மில்லியன் ஆன செலவொன்று மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அந்த கட்டமைப்பை நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற ஆரம்ப பிரதான செயற்பாடுகள் 13 துறைகள் முழுமையாக அபிவிருத்தி செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்ற நிலைமைக்கு காணப்படாதிருந்தது. எவ்வாறான போதிலும், கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2023 டிசம்பர் 31 ஆம் திகதி ஆகும்போது (ITMIS) | ITMIS அறிமுகப்படுத்தல் 2010ஆம் வருடத்திலிருந்து நிதி முகாமைத்துவ வினைத்திறனான செயற் திட்டத்தின் (FMEP) ஊடாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. அந்த கட்டமைப்பின் பிரதான செயற்திட்ட துறை விரிவாக்கத்திற்காக 2019 ஆம் வருடத்தின் ஜுலை மாதம் அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப்பெற்றிருந்தது. அப்போதும் கட்டமைப்பின் பாதிட்டை திட்டமிடல் மற்றும் பாதீட்டு ஒதுக்கீட்டுக்குரிய செயற்பாடுகள் விரிவாக்கம் FMEP செயற்த்திட்டத்தின் மூலம் முழுமை யடைந்திருந்தது. 2019 ஆம் வருடத்தில் உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்புக்கு பின்னர் இடம்பெற்ற நிலைமைகள், 2020 மற்றும் 2021 வருடங்களில் COVID தொற்று பரவலானதன் காரணமாக ஏற்பட்ட ஊரடங்கு சட்டம் விதிக்கப்படுதல் மற்றும் நாடு மூடப்பட்டிருத்தல் நிலைமை மற்றும் 2022 ஆம் வருடத்தில் ஏற்பட்ட அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிகள் காரணமாக ITMIS கட்டமைப்பின் விரிவாக்க | ஏற்கனவே பின்தங்கிய நிலையில் உள்ள இந்த அமைப்பை முழுமையாக உருவாக்கி விரைவில் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கட்டமைப்பு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் 2023 டிசம்பர் 31 ஆம் திகதியில் ரூபா 43,887,382 மற்றும் அமெரிக்க டொலர் 989,103 ஆன தொகை ஒன்று சேவை வழங்கும் நிறுவனம் ஒன்றுக்கு மேலும் செலுத்த வேண்டியுள்ளதாக அவதானிக்கப்பட்டது. | நடவடிக்கைகள் முறையாக மேற்கொள்ளப்படுவதற்கு தடைகள் ஏற்பட்டன. 2023 ஆம் வருட முதல் பகுதியில் அமைச்சின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட செயற்த்திட்ட மதிப்பீட்டு நடவடிக்கைகள் காரணமாக கட்டமைப்பின் விரிவாக்கம் இடம் பெற முடியாதிருந்தது. அதன் பிரகாரம் 4 வருட கால அளவு ITMIS கட்டமைப்பின் விரிவாக்கம் முறையாக இடம் பெற்றிருக்கவில்லை. | |
| (ஆ) | ITMIS கட்டமைப்பின் ஆரம்பத்திலிருந்து அதனை நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த, சம்பள முகாமைத்துவ செயற்பாட்டு துறையை தாபித்து நடைமுறைப்படுத்தாமல் 2016 ஆம் வருடத்தில் e-Payroll எனும் வேறு சம்பள முகாமைத்துவ கட்டமைப்பொன்றை நிதி அமைச்சுக்கு மாத்திரம் அறிமுகப்படுத்தப்பட்டிருந்ததுடன், அதற்காக 2023 டிசம்பர் 31 ஆம் திகதி ஆகும் போது ரூபா 5,704,871 ஆன செலவொன்றும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | 2016 ஆம் வருடமாகும் போது மொத்த அரசு பிரிவுக்கான சம்பள முகாமை செயற்பாட்டு கட்டமைப்பின் தேவையை நிதி அமைச்சினால் அடையாளம் காணப்பட்டிருந்தது. மேற்குறித்த ITMIS கட்டமைப்பின் மூலம் நிதி அமைச்சுக்காக மாத்திரம் அறிமுகப்படுத்துவதற்கு இருந்த சம்பள முகாமைத்துவ நடைமுறையானது வரையறைக் குட்படுத்தப்பட்டிருந்ததுடன் அதன் முழு அரச பிரிவுக்காகவும் ஈடுபடுத்துவதற்கு பொருத்தமற்றதாக இருந்தது. மேலும் அவ்வாறான இடத்தில் அந்த நடைமுறை ITMIS கட்டமைப்பின் மூலம் விரிவு படுத்துவதற்கு பொருளாதார ரீதியாகவும் நன்மையற்றதொன்றாகும். அதனால் 2016 ஆம் வருடத்தின் ஏப்ரல் மாதத்தில் இடம்பெற்ற அமைச்சின் கொள்கை கூட்டத்தின் போது மொத்த அரச பிரிவுக்காகவும் சம்பள மகாமைத்துவத்திற்காக வேறொரு மென்பொருள் ஒன்றை பெற்றுக் கொள்வதற்கு எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் e-payroll சம்பள முகாமைத்துவ கட்டமைப்பு தற்போது | பொருளாதாரம் மற்றும் செயல்திறனில் விசேட கவனம் செலுத்தப்பட்டு முழு பொதுத்துறைக்கும் ஊதிய முகாமைத்துவ முறைமையை செயல்படுத்துவது துரிதப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. | |
| (இ) | 2023 டிசம்பர் 31ஆம் தேதியில் அரச நிதி கூற்றுகளுக்கு அமைய, மத்திய அரசின், அரச உத்தியோகத்தர்களின் முற்பண கணக்குகள் (8493) மீதி ரூபா 30,720 மில்லியன் ஆக காணப்பட்டதுடன், கணக்காய்வு சமர்ப்பிக்கப்பட்டிருந்த கால பகுப்பாய்வின் பிரகாரம் அந்த மீதி ரூபா 30,516 மில்லியன் ஆகும். அதன் பிரகாரம் ரூபா 204 மில்லியன் வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | அனைத்து நிறுவனங்களினதும் வருடாந்த கால பகுப்பாய்வு அறிக்கை எங்களால் பரிசீலிக்கப்பட்டு, தொடர்ந்தும் பின் தொடரப்பட்டு உரிய நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பை மேற்கொண்டு அந்த மீதிகள் சரியாக பேணப்பட்டு வருவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்படும். செயலிழந்த மீதிகள் தொடர்பாக திணைக்களத்திடம் காணப்படுகின்ற பழைய தகவல்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு செயலிழந்து காணப்படுவதற்கான காரணங்கள் சரியாக அடையாளம் காணப்பட்டு தீர்வு செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | நிலுவைகளை தீர்ப்பதற்கான உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டு தற்போதுள்ள அமைப்பை மேம்படுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | 2023 டிசம்பர் 31 ஆம் திகதியில உள்ளவாறாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள அரச உத்தியோகத்தர்களின் முற்பணங்கள் (8493) கால பகுப்பாய்வின் பிரகாரம், மாகாண சபைகளின் நிறுவனங்களுக்கு இடமாற்றம் பெற்று சென்றுள்ள உத்தியோகத்தர்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் மற்றும் மாகாண சபைகளுக்காக நிரந்தரமாக விடுவிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள், மரணமடைந்துள்ள உத்தியோகத்தர்கள், இளைப்பாரியுள்ள உத்தியோகத்தர்கள், வேலை இடைநிறுத்தப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள், சேவையை விட்டுச் சென்ற/ நிறைவு செய்த உத்தியோகத்தர்கள், இரட்டை அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள, வெளிநாடு சென்றுள்ள/ உள்நாட்டில் | இந்த கடன் மீதிகள், தாபன விதி கோவை, நிதிப் பிரமாணம் மற்றும் காணப்படுகின்ற சுற்று நிருப ஏற்பாடுகள் பின்பற்றப்பட்டு தீர்வு செய்தல், அந்தந்த நிறுவனங்களின் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்களின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர்களின் பொறுப்பாகும். காலாண்டு ரீதியாக அந்த நிறுவனங்களிடம் இருந்து முன்னேற்றங்களை பெற்றுக்கொண்டு கடன் மீதிகளின் அறவீடுகளின் முன்னேற்றங்கள் பரீட்சிக்கப்பட்டு, தேவையான தொழில்நுட்ப அறிவுரைகள் வழங்கப்பட்டு, தொடர்ந்தும் பின் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. | -மேற்படி- |

விடுமுறை பெற்றுள்ள மற்றும் வேறு வகையிலான அடிப்படையில் உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய 5 வருடங்கள் 10 வருடங்களுக்கு இடையிலான மீதிகள் ரூபா 112,939,218 ஆக காணப்பட்டதுடன், 10 வருடங்களையும் விட அதிகமான அவ்வாறு அறவிடப்பட வேண்டிய மீதி ரூபா 277,066,082 ஆக காணப்பட்டது.

## 4. மனிதவள முகாமைத்துவம்

### 4.1 ஆட்சேர்க்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளபடியான பதவியணி

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக திணைக்களத்தில் காணப்படுகின்ற 44 வெற்றிடங்களில் சிரேஷ்ட மட்டத்திலான 12 பதவிகள், மூன்றாம் மட்டத்திலான 02 பதவிகள், இரண்டாம் மட்டத்திலான 27 பதவிகள் மற்றும் ஆரம்ப மட்டத்திலான 03 பதவிகளும் வெற்றிடமாக காணப்பட்டன. உரிய பதவிகளை நிரப்புவதற்கு அல்லது ஆட்சேர்ப்பு பகுப்பாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு தேவையற்ற பதவிகளை அடக்குவதற்கோ மீளாய்வாண்டில், திணைக்களம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | அந்த வெற்றிடங்களில் தற்போது சிரேஷ்ட மட்டத்தில் வெற்றிடமாக காணப்படும் பதவிகளுக்கு அதிகாரிகள் நியமிக்குமாறு நிதி அமைச்சின் செயலாளர் ஊடாக பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் இதுவரை அதற்கான உத்தியோகத்தர்கள் கிடைக்கப்பெற வில்லை. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது பதவியணியை திருத்தி யமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |